

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2025) தலைமைச் செயலகத்தில், HWASEUNG FOOTWEAR குழும நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் கே.ஓய். லி, காலணி பிரிவு முதன்மை செயல் அலுவலர் பாப் ஷரோக், இயக்குநர் ரீனி ஷின் ஆகியோர் சந்தித்து பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி அருண் ராய், இ.ஆ.ப. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னை – கோவை – கன்னியாகுமரி மாவட்டங்களில் விளையாட்டு விடுதி – சிறு விளையாட்டரங்கம்!

# ரூ.10.89 கோடியில் விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்புப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஆக. 23-

சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி, புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், புதிதாக கட்டப்பட உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி, புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், புதிதாக கட்டப்பட உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2025) அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்குகொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல். உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், மாவட்ட விளையாட்டரங்கங்களில் சர்வதேச தரத்திலான விளையாட்டு வசதிகளை ஏற்படுத்துதல், முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் உள்ளிட்ட விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை புதிதாக உருவாக்குதல், சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அதனடிப்படையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2025 2026 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத்தொடரில், சென்னை, கோபாலபுரத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் புதிய விளையாட்டு விடுதி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் புதுப்பிக்கப்படும் என்று அறிவித்தார்.

கோபாலபுரம் கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 மாணவர்கள் தங்கி குத்துச்சண்டை பயிற்சி பெறும் வகையில் புதிய விளையாட்டு விடுதி, உணவருந்தும் கூடம், சமையலறை, பயிற்சி மேற்கொள்ளும் பகுதி ஆகிய வசதிகளுடன் கட்டப்பட உள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து, புதுப்பிக்கப்பட உள்ளது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 200 மீ தடகள (மண்) பாதை, கையுந்துபந்து, கபாடி, கூடைப்பந்து, இறகுப்பந்து, கோகோ ஆடுகளங்கள், நீளம் தாண்டுதல் பகுதி ஆகிய விளையாட்டு வசதிகள் மற்றும் நுழைவு வாயில், நிர்வாக அலுவலக கட்டடம், கழிப்பறை வசதி ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் கட்டப்பட உள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை கோபாலபுரத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள விளையாட்டு விடுதி, கோயம்புத்தூர் மாவட்டம் நேரு விளையாட்டு வளாகத்தில் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா.எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் தொண்டரணி சார்பில் மாபெரும் கருத்தரங்கம்!

## லட்சுமி ராமகிருஷ்ணன் – முனைவர் எழிலரசி – கவிஞர் ஆ.அனுகிரகா சிறப்புரை!

சென்னை, ஆக. 23-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் மகளிர் தொண்டரணி சார்பில் சாதனை படைப்பது திராவிட மாடலே! சரித்திரம் படைப்பது முதல்வரின் ஆட்சியே! எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் திரைப்பட நடிகை, இயக்குநர், சொல்வதெல்லாம் உண்மை புகழ் திருமதி. லட்சுமி ராமகிருஷ்ணன், முனைவர் எழிலரசி, கவிஞர்.ஆ.அனுகிரகா, ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் மகளிர் தொண்டரணி சார்பில் சாதனை படைப்பது திராவிட மாடலே! சரித்திரம் படைப்பது முதல்வரின் ஆட்சியே எனும் தலைப்பில் - மாபெரும் கருத்தரங்கம் 24/8/25 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 06.00 மணியளவில் சென்னை, புரசைவாக்கம், பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் உள்ள லட்சுமி மஹாலில் நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி தலைமை வகிக்கிறார் சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கின்றனர்.

வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கோ.ஏகப்பன், பரிதிஇளம் சுருதி எம்.சி, கே.எஸ்.எம். நாதன், எஸ்.மணிமுடி, புனிதவதி எத்திராசன் எம்.சி, கோ.மணி, வே.உமாகாந்தன், சரிதாமகேஷ்குமார் எம்.சி, சுதாதீனதயாளன் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி. ஜி.தாமோதரன், எல். சுந்தர்ராஜன் எம்.சி, பாத்திமா முஸாபர் எம்.சி, க.வினோத் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் கருத்தரங்கில் - திரைப்பட நடிகை, இயக்குநர், சொல்வதெல்லாம் உண்மை புகழ் திருமதி. லட்சுமி ராமகிருஷ்ணன், முனைவர் எழிலரசி, கவிஞர்.ஆ.அனுகிரகா, ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மேலும், இக்கருத்தரங்கில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியாராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி, இ.பரந்தமான் எம்.எல்.ஏ, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.எம். யாழினி, க.நந்தீஸ்வரன், சாவித்திரி வீரராகவன், கே. அன்னப்பூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சி ராணி, சகினாபேகம், சூர்யா ரகு, அமுல்பாண்டியன், ஜெய சூர்யா, யு.இலக்கியா, எம். எழில், எஸ்.விஜயலட்சுமி, ஏ.நிர்மலாதேவி, ஏ.சுகந்தி, வி.நதியா, ஜி.ஞானதீபம், புனிதாமோகன் கே.லட்சுமி பி.ஜெயந்தி பி.ஜலபூசனம் எஸ். லட்சுமி ஆர்.சாந்தி டி.தேன்மொழி எம்.அன்னகிளி கே. சாந்திபில்லி மகேஸ்வரி ப. மலர்கொடி வி.வளர்மதி வி.ஜெயசூர்யா ஏ.சாவித்திரி ஏ.சுசிலா ஆர்.அனிதா சி. ராதிகா ஜி.செல்வி கே.காயத்திரி கௌரிதருபரன் தனபாக்கியம் பிரீத்தி ஆர்.கோமதி கே. ஜெயந்தி ஜே.சுகந்தி சி.அனிதா பி.கலைவாணி என்.ராஜகலா டி.விமலா ஆர். பிரியாமகேஸ்வரி சாந்தி மாசிலாமணி ஆர்.இருதயமேரி எம். கிருஷ்ணவேணி கே.சித்ரா ஆர்.மணிமேகலை டி.தமிழ்செல்வி தரணி சீனிவாசன் எஸ். அருள்செல்வி ஈஸ்வரி கண்ணன் ஏ.சகிலா ஜெ.வரலட்சுமி எஸ்.சந்திரகலா அனுஷியா பாண்டுரங்கன் பிரேமா தயாளன் எஸ்.ரசூல் டி.வி.வேலு எம்.மலர்மாறன் எம்.தில்லைகுமார் பி.சி.சம்பத்குமார் ஜெ.கே.கருணாகரன் சூளை சுப்புராயலு எழும்பூர் தெற்கு/ வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர். பாபு, டால்பின் வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு இ. மொய்தீன், டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன்இ ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இக்கருத்தரங்கில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் அ.நிர்மலாதேவி, வட்டகக் கழக செயலாளர்கள்: சு.மனோகர், ந.பாலு நன்றி கூறுகிறார்கள்.







காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், மௌலிவாக்கத்தில் புதிய காவல் நிலையத்தை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். உடன் ஆவடி மாநகர காவல் ஆணையாளர் கே.சங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், மாமன்ற உறுப்பினர் ஜெ.செல்வேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாஸ்கரன், கீதா ஆனந்தன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# ‘தி.மு.க.75’ நூல் குழுவினருடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை!





கழக இளைஞர் அணி தமிழ்நாடு முழுவதும் நிர்வாகிகள் நியமனம், அறிமுகக்கூட்டங்கள் போன்ற அரசியல் பணிகளை ஆற்றுவதுடன் சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகங்கள் அமைப்பது, இளம் பேச்சாளர்களுக்குப் பயிற்சியளித்து கூட்டங்களில் பேச வைப்பது, முரசொலி பாசறைப்பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், கலைஞர் மாணவப்பத்திரிகையாளர் திட்டம், இளம் ஆய்வாளர்களுக்கான கலைஞர் நிதி நல்கை திட்டம் போன்ற கருத்தியல் பணிகளையும் முன்னெடுத்து வருகிறது.

இளைஞர் அணியின் கருத்தியல் சார்ந்த பணிகளின் அடுத்தகட்ட முன்னெடுப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் அரசியல் - சமூகம் - பொருளாதாரம் - பண்பாட்டுத் தளங்களில் கழகம் ஏற்படுத்திய தாக்கம் குறித்த தி.மு.க. 75 கட்டுரைத் தொகுப்பு, நம் கழக இளைஞர் அணியின் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ மூலம் வெளிவரவிருக்கிறது.

கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலோசனைக்குழுவில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் ப.திருமாவேலன், மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் ராமச்சந்திரன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி லெனின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் முக்கியமான எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், சமூக, அரசியல் இயக்கத் தலைவர்களின் முக்கியமான கட்டுரைகளைத் தாங்கி வெளிவரவிருக்கும் இந்தக் கட்டுரைத் தொகுப்பு ஒரு முக்கியமான வரலாற்று ஆவணமாக அமையும்.

இந்தக் கட்டுரைத்தொகுப்பின் உள்ளடக்கம், வடிவமைப்பு பணிகள் குறித்து ஆலோசனைக்குழு மற்றும் ஆசிரியர் குழுவுடன் கழக இளைஞர் அணிச்செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.08.2025 அன்று சென்னை குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

### மேயர் பிரியா – தாயகம் கவி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கினார்!

சென்னை, ஆக. 23-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால்

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் நேற்று திரு. வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 6 வார்டு-71 சென்னை பெரம்பூர் பள்ளிக்கூட தெருவில் நேற்று (22.8.2025) வெள்ளிக்கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு அவர்கள் பல்வேறு





கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு ஆவணங்களை வழங்கினார்.

குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..23 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 314 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 80 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 8 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணபப்ங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 7 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 43 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஒய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - - 296 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 5 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -2 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்,

கலைஞர் மகளிர் உரிமை தொகை -1293 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்,

இதர மனுக்கள் -81 என மொத்தமாக 2569 மனுக்கள் பெறப்பட்டு அதில் 2562 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், திருவிக நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், புனிதவதி எதிராஜன் புல்லட் கே ரமேஷ் செயல் பொறியாளர் சரவணன்,வட்ட கழக செயலாளர்கள் பரிமளா சுரேஷ்பாபு மா ருத்ரமூர்த்தி மற்றும் 71,71அ வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கினார்!

சென்னை, ஆக 23–

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக ”உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 8 வார்டு 108 சென்னை சேத்துப்பட்டு மேயர் ராமநாதன் சாலையில் உள்ள மாநகராட்சி மைதானத்தில் நேற்று (22.8.2025) வெள்ளிக்கிழமை நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு ஆவணங்களை வழங்கினார்.





குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..7 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 80 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 61 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி 15 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணபப்ங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 7 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 50 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) ஒய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 73 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் 5 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை 6 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை 695 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் 332

என மொத்தமாக 1495 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1463 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், மண்டல குழு தலைவர் கூ.பீ. ஜெயின் எழும்பூர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் வி.சுதாகர்,அ. நிர்மலாதேவி, அன்னப்பூரணி, குணசேகரன், வட்ட கழக செயலாளர்கள் எல் சுந்தரராஜன் வான்மதி கதிரவன் மற்றும் 108, 108அ வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.